மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ஆம் நாள் புதன்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.தீபா உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 209/2014 பி.வா.சா.1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சாமிநாதன் | வயது | .. 57 |
| த/பெ. | .. திருப்பாதியார் | சாதி | .. |
| கிராமம் | .. ஆத்துரை | சமயம் .. | |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

**பி. வா.சா.1 ( முதல் விசாரணை )**

1. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்து இருக்கிறார் என்று தெரியுமா என்றால் பொதுவழி பாதையில் பட்டா வாங்கியதால் தாக்கல் செய்துள்ளார். எந்த சர்வே எண் பட்டா வாங்கினார்கள் என்றால் 135/2. மேற்கூறிய சர்வே எண். 135/2 அதற்கு ஜக்பந்தி என்னவென்றால் கால்வாய் தான். கால்வாய் தவிர வேறு எதுவும் இல்லை. ( சாட்சி தற்போது பொதுவழிக்கு கிழக்கு பட்டாம்மாள் வீடு உள்ளது என்று கூறுகிறார்).

2. இந்த வழக்கு வேறு சர்வே எண் மீது போடப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. நான் ஆத்துரை ஊராட்சி மன்ற தலைவராக உள்ளேன் என்று சொன்னால் சரிதான். 2011 முதல் 2016 வரை ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன். பட்டம்மாளின் கணவர் பெயர் முனுசாமி உயிரோடு இருக்கும் போது சர்வே எண். 308/9க்காக வா.சா.ஆ.1 பட்டா 30.06.1992 ல் பட்டா வாங்கினார் என்றால் எனக்கு வழக்கு தாக்கல் செய்யும் போது தான் தெரியும்.

3. மேலும் முனுசாமி பெயர் மீது பட்டா, சர்வே எண். 135/2 கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. முனுசாமி அவர்கள் உயிரோடு இருக்கும் போது 17.10.2012 ல் ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தின் ( **வா.சா.ஆ.6** ) மூலம் பட்டம்மாளுக்கு வழக்கு சொத்துக்களை கொடுத்துவிட்டார் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்னர் அவர் எழுதிவைத்தார்.

4. மேற்கூறிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தான் வருவாய் அதிகாரிகள் மனைவரி தோராயா பட்டா எண். 243 ( **வா.சா.ஆ.2** ) வழக்கு சொத்துக்களுக்கு பட்டம்மாள் பெயருக்கு கொடுக்கப்பட்டது என்றால் தவறு. என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ.3 மற்றும் 4** குறிப்பிட்டுள்ள வீட்டுவரி ரசீது உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் ஊராட்சி மன்ற தலைவராக இருக்கும் தருவாயில் முனுசாமி அவர்கள் வீட்டுவரி ரசீதில் நான் கையொப்பம் இட்டுயிருக்கிறேன் என்றால் அது கிளர்க் செய்த தவறு.

5. எனக்கு முன்னால் ஊராட்சி மன்ற தலைவராக பன்னீர் செல்வம் இருந்தார் என்றால் சரிதான். அவரிடம் முனுசாமி அவர்கள் 10.12.2008 ல் வீட்டுவரி செலுத்தியுள்ளார் என்றால் அவரின் உறவுக்காரர் என்பதால் பன்னீர் செல்வம் அவர்கள் கையொப்பம் இட்டு கொடுத்துள்ளார். வழக்கு சொத்தை அளப்பதற்காக வாதி மனு தாக்கல் செய்து அதில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை ( **நீதிமன்ற ஆவணம் 1.**) மற்றும் வரைபடம் தாக்கல் செயதுள்ளார் என்றால் சரிதான்.

6. மேற்கூறிய வரைபடத்தில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தில் தென்னங்கன்று, வாழைமரம், குப்பை மற்றும் கால்வாய் ஒட்டி செப்டிக் டேங்க் உள்ளதாக தாக்கல் செய்துள்ளர் என்றால் ஏரிகால்வாய்க்கு கரையிலேயே செப்டிக்டேங்க் கட்டப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும் ஏரிகால்வாய் இருந்து தள்ளிதான் பி அட்டவணை சொத்தில் செப்டிக்டேங்க் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. தெற்கில் இருந்து வடக்கில் செல்லும் தார் சாலை புளியமரம் வரை தான் மாதிரி வரைபடத்தில் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. புளியமரம் நேர்கிழக்கு துண்டு தெரு வழியாக அடுத்து தெற்கு பக்கத்தில் மூன்று தெருக்கள் கிழக்கு மேற்காக அமைந்துள்ளது என்றால் ஒரு தெரு தான் அமைந்துள்ளது. நான் பி அட்டவணை சொத்து வழியாக நான் காந்திநகருக்கு வண்டி பாதை உள்ளதாக நான் வரைபடம் எதாவது தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை, ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் மட்டும் போட்டுள்ளார். ( **பி.வா.சா.ஆ.6** ).

8. மேற்கூறிய பி.வா.சா.ஆ.6 ஆனது வட்டாரா வளர்ச்சி துறையினரிடமோ, மாவட்ட ஆட்சியரிடோமோ வரவைத்து தாக்கல் செய்தது இல்லை என்றால் சரிதான். மேலும் பி.வா.சா.ஆ.8ஆனது மாவட்ட ஆட்சித்தலைவர் அளித்த சுற்றறிக்கை நகல் தான் தாக்கல் செய்துள்ளார் அதன் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும் பி.வா.சா.ஆ7 தீர்மான நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.5ல் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.135/2க்கிற்கு தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.5ல் நான் கூறும்படி சர்வே எண். 135/2 மற்றும் 135/1 என்ற சர்வே எண்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

9. பி.வா.சா.ஆ.9 ல் பட்டம்மாள் மற்றும் கிருஷ்ணன் அவர்களுக்கு எதிராக பெருமாள் , ராமு, முனுசாமி, சேகர், இளங்கோ ஆகியோர் **ஓ.எஸ்.245/2014** வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்று இன்று வரை அந்த வழக்கில் நிதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கின் வழக்கு சொத்து சர்வே எண்.308/10, 135/1 இவை இரண்டும் அரசு பொறம்போக்கு இடம் என்றால் அது பொதுபாதை ஆகும்.

10. மேலே உள்ள சர்வே எண்கள் பொதுபாதை என்பதற்காக நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் எந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால், மற்றும் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. உண்மையிலேயே மேற்கூறிய சர்வே எண்கள் பொதுவழி பாதை என்றால் முனுசாமி வாங்கிய பட்டாவை ரத்து செய்து இருப்பார்கள் என்றால் முயற்சி செய்துஇருப்பார்கள்.

11. முனுசாமி வழக்கு சொத்திற்கு பட்டா வாங்கி 22 வருடங்களுக்கு அவர் அனுபவம் செய்து இருந்த நிலையில் நான் ஊராட்சி மன்ற தலைவராக இருந்து அவருக்கு தொல்லை கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் **ஓ.எஸ்.245/2014** வழக்கு தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. நான் ஊராட்சி மன்றத்தில் இருமுறை தீர்மானம் போட்டபிறகு துணை மாவட்ட ஆட்சியர் தாவா சொத்துக்களை வந்து ஆய்வு செய்தார் என்றால் ஆய்வு செய்தார்.

12. தாவா சொத்துக்களான ஆக்கிரமிப்பு செய்த சொத்துக்கள் இல்லை என்பதால் தான் அவர் எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேலும் பதிலுரையில் 4வது பத்தியில் தாவா சொத்துக்களானது அரசுக்கு சொந்தமான ஏரிக்கரை, அரசு புறம்போக்கு என்று நான் கூறுவது முற்றிலும் தவறு என்று சொன்னால் சரியல்ல. பி அட்டவணைக்கு சொத்திற்கு மேற்கில் தான் கால்வாய் உள்ளது என்றால் தவறு. வாதிக்கு மூன்று பெண்பிள்ளைகள் என்பதாலும் அவர் நான் ஊராட்சி மன்ற தலைவராக இருக்கும் போது எனக்கு வாக்கு அளிக்கவில்லை என்பதாலும் அவர் மீது நான் இந்த பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்துக்கள் உரிய முறையில் பட்டா பெற்று

அனுபவித்துவருவதால் அரசோ, ஊராட்சிமன்றமோ, நிலம் ஆர்ஜகம் செய்யாமல் தாவா சொத்துக்களில் ரோடு அமைக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

13. ஒ.எஸ்.245/2014ல் உள்ள வாதிகள் அனைவருக்கும் நிலம் உள்ளதால் புதிய பாதை அமைக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. ஆகையால் வாதி கோரியபடி தாவா சொத்துக்கள் வாதிக்கு தான் உரிமை என்றும், அரசுக்கோ, ஊராட்சி மன்றத்திற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே வழி இருந்துயிருந்தால் ஒ.எஸ்.245/2014 வழக்கில் நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்று நிலத்தை அளந்து இருப்பேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி இந்த வழக்கில் பரிகாரம் பெற தகுதியானவர் என்று சொன்னால் சரியல்ல.

**( குறுக்கு விசாரணை முடிவடைந்தது ).**

Taken down by me in open Court read
over to the witness and acknowledged
by him/her to be correct.

Sdl/-B.Salma
District Munsif.
Polur.